தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மூலிகை சாகுபடியை ஊக்குவிக்க தனியார் நிறுவனத்துடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மக்கள் எந்தவித பக்க விளைவுகளும் இல்லாத இயற்கை கொடுத்த பரிசான மூலிகைத் தாவரங்களிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகளின் மகத்துவத்தினை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உணர்ந்துள்ளனர். இந்த சமயத்தில் மக்களுக்கு நமது பாரம்பரிய வைத்திய முறைகளைப் பற்றியும், மூலிகைகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும் அதன் உற்பத்தி முறைகளைப் பற்றியும் அறிவியல் பூர்வமாக கொண்டு செல்வது இன்றியமையாதது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் கோயம்புத்தூர் ஆரிய வைத்திய மருந்து நிறுவனமும் இணைந்து மருத்துவ குணமுள்ள மூலிகைகளைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்ள ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டன.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் மூலிகைகளைப் பற்றிய ஆய்வு, கல்வி மற்றும் அபிவிருத்திக்கு இருதரப்பும் முழுமையாக ஒத்துழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் மூலிகைத் தாவரங்களின் உற்பத்தி தொடர்பான மற்றும் பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்களை பல்கலைக்கழகம் வழங்கும். மேலும், உயிர்ம வேளாண் தொழில்நுட்பங்கள் மூலம் பயிர் மேலாண்மை செய்யவும், அறுவடைக்குப் பின் சேமிப்புக் கிடங்கில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை நிர்ணயம் செய்யவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும்.

மேலும், மாணவர்கள், விவசாயிகள், ஆர்வமுள்ள பொதுமக்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு மூலிகைப் பயிர் சாகுபடி குறித்து பயிற்சி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மூலிகைப் பயிர்களில் நாற்றாங்கால் பராமரிப்பு, உயிர்ம வேளாண்மை, ஆயுர்வேத மருத்துவம் மற்றும் கோசாலை உயிர்ம பன்பொருட்கள் தயாரித்தல் பற்றிய விழிப்புணர்வு உள்ளடக்கிய பட்டய மற்றும் சான்றிதழ் படிப்புகளை உருவாக்கவும் இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து பேசும்போது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் முனைவர். எம். மகேஷ்வரன் அவர்கள், வாய்மொழியாக வழக்கத்திலிருக்கும் கிராம வைத்திய முறைகளை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கவும், நாம் அறிந்த வைத்திய முறைகளை அனைவருக்கும் சென்று சேருமாறு கொண்டு செல்லவும் இப்பல்கலைக்கழகம் முன்முயற்சி எடுக்கும் என்றார்.

இவ்வொப்பந்தத்தின் முக்கிய உறுப்பினரான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மூலிகைப் பயிர்கள் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். ராஜாமணி கூறும்போது, மூலிகைப் பயிர்களுக்கான தேவை மிக அதிகமாக உள்ளது எனவும் உதாராணத்திற்கு அசுவகந்தாவின் தேவை மாதத்திற்கு 30 டன் அளவிற்கு தேவைப்படுகிறது. அவ்வளவும் மத்திய பிரதேசத்திலிருந்து தருவிக்கப்படுகிறது என்றார். இதுபோலவே, 30 வகையான மூலிகைகளின் தேவை அதிகமாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மூலிகைகளின் பயிர் சாகுபடியை ஊக்குவிக்கவும் அதன் பயன் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் விளைவிக்கப்பட்டு மூலிகைப் பொருட்களுக்கு உரிய சந்தையினை உருவாக்கவும் இவ்வொப்பந்தம் வழி வகை செய்யும் என்றார்.

இவ்வொப்பந்தத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் ஆராய்ச்சி மைய இயக்குனர் முனைவர். எம். மகேஷ்வரன் அவர்களும் ஆரிய வைத்திய மருந்து நிறுவனத்தின் சார்பில் அதன் நிர்வாக இயக்குனர் டாக்டர். பி. ஆர். கிருஷ்ணகுமார் வாரியர் அவர்களும் கையெழுத்திட்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்





